கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# HISS 3103 இங்கிலாந்து வரலாறு (1485 – 1763)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாளில் இரண்டு பகுதிகளில் எல்லாமாக ஆறு வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

01. ரியூடர் வம்சத்து அரசர்கள் முடியாட்சியின் அதிகாரங்களை வலுப்படுத்துவதற்குப் பாராளுமன்றத்தை எவ்வாறு பயன்படுத்தினார்கள்?

02. "எலிசபெத் மகாராணியின் ஆட்சியிலே சமூகப் பிரிவினைகளுக்கு ஏதுவான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இங்கிலாந்தின் காலனித்துவ ஆதிக்கம் வளர்ச்சி பெறுவதற்கான அத்திவாரங்கள் அமைக்கப்பட்டன." இக்கூற்றினை ஆராய்க..

03. ஸ்ருவர்ட் மன்னர் முதலாம் சார்ள்ஸின் ஆட்சியில் அரசருக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுகளின் அடிப்படைக் காரணங்களை ஆராய்க.

## பகுதி – II

04. "அமெரிக்க குடியேற்ற நாடுகளில் ஏற்பட்டிருந்த அரசியல், சமூக மாற்றங்களைப் பிரித்தானியர் சரிவரக் கணிப்பிட முடியாதமையினாலேயே அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்டு, அதிலே பிரித்தானியா தோல்வியடைய நேர்ந்தது." இக்கூற்றினை ஆராய்க.

05. பதினெட்டாம் நூற்றாண்டிலே பிரித்தானியா கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கையினைப் பரிசீலனை செய்க.

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் எழுதுக.
    (1) இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து ஆகியன ஒன்றாக இணைக்கப்பட்டமை
    (2) கைத்தொழிற் புரட்சியால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள்
    (3) ஏழாண்டுப் போரின் மூலம் பிரித்தானியா ஈட்டிய சாதனைகள்
    (4) ஒலிவர் குறொம்வெல்

***